1996 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழில் மையத்திலே பயிற்சி பெறுவதற்கு யார் வேண்டுமென்றாலும் அங்கே சென்று அந்த லோ காஸ்ட் டெக்னாலஜியை படித்துக்கொள்ளலாம். அங்கே ஆண்கள்தான் பயில வேண்டும் அல்லது பெண்களுக்குத் தான் பயிற்சி கொடுக்கப்படும் என்றில்லை. யார் வேண்டுமானாலும் பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. கோவிந்தராசு.

திரு. மா. கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு ஏதாவது தனியாக லைசன்ஸ் தருமா அல்லது வேலை வாய்ப்பில் அவர்களுக்கு முன்னுரிமை தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்களுக்குத் தனியாக எந்தவிதமான முன்னுரிமையும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 86, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

86—

விவசாயப் பல்கலைக் கழகம் அமைத்தல்

82017 திரு. கு. சீனிவாசன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10.15

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்

என்னுடைய கேள்விக்கு இல்லை என்று பதில் அளித்தார்கள். மன்னார்குடி கோட்டத்தைப் பொறுத்தவரையிலே, மன்னார்குடியை தலைநகரமாகக் கொண்ட மன்னார்குடி கோட்டம் நாகை -காயிதே மில்லத் மாவட்டம் தஞ்சை மாவட்டம் இரண்டையும் சேர்த்து அங்கே மொத்தமாக மகசூல் ஆகின்ற நெல்லைப் பொறுத்த அளவிலே 50 விழுக்காடு மன்னார்குடி கோட்டத்திலே மகசூலை பெறக்கூடிய அளவிற்கு தீவிரமான சாகுபடி அந்தப் பகுதியில் செய்யப்படுகின்ற காரணத்தினால் விவசாயத்தை தீவிரமாக நவீனமான முறையிலே அதிக விளைச்சலை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலே அங்கே இன்னும் அதிகமான விளைச்சலை பெறுவதற்கான நவீன யுக்திகளைக் கையாளுவதற்கு ஏதுவாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்க முடியாவிட்டாலும் குறைந்த பட்சம் ஒரு விவசாயக் கல்லூரியையாவது அங்கே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய அரிசித் தேவைக்கு அதிகமான பங்கை இன்றைக்கு வழங்கி வரக்கூடிய மாவட்டம் தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்கள். அந்த மாவட்டங்களினுடைய விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், குறைந்த செலவிலே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வேண்டிய பயிற்சி மையங்கள் அங்கே இருக்கின்றன. மன்னார்குடியில் பல்கலைக் கழகம் அமைக்க முடியாது என்றுதான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே - கோயம்புத்தூர், மதுரை கிள்ளிகுளம், திருச்சி மாவட்டத்தில் நவலூர் குட்டப்பட்டு, குமுலூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் மேட்டுப்பாளையத்தில் வனக் கல்லூரி, மதுரை பெரிய குளத்திலே தோட்டக்கலைக் கல்லூரி, மேலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் ஒரு விவசாயக் கல்லூரி ஆகிய கல்லூரிகள் இன்றைக்கு இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளிலே படித்துவிட்டு வேலையின்றி ஏறத்தாழ 2000 வேளாண் பட்டதாரிகள் இருக்கிறார்கள். எனவே, புதிய கல்லூரியை மேலும் துவக்கினால் படித்து வெளியேறுகிற வேளாண் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது சற்று சிரமம். எனவேதான் புதிய கல்லூரி துவங்கக் கூடிய நிலையிலே இன்றைக்கு நாம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது இரண்டாவது கேள்விக்கும் இல்லை என்று அமைச்சர்

அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே படித்துவிட்டு 2,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதினால் கல்லூரி அமைக்க இயலாத நிலையைச் சொன்னார்கள். இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே படித்தவர்கள் வேலையை மட்டும் நாடியிருக்கும் நிலைமையைப் போக்கிடவும் அவர்கள் இங்கே பண்ணை சாகுபடி, இன்னும் பல்வேறு நிலைமைகளிலே தாங்களே முன்வந்து விவசாயத்தைப் பெருக்குகின்ற அளவிற்கு விவசாயப் பட்டதாரிகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படித்து வெளியே வரக்கூடிய வேளாண்மை பட்டதாரிகள் அரசு அலுவலகத்திலே வேளாண் அலுவலராக பணியாற்ற வேண்டுமென்ற விருப்பத்தினால்தான் இன்றைக்கு அவர்களுக்கு வேலையில்லாத நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் படித்து பட்டம் பெற்ற வேளாண்மை பட்டதாரிகள் தங்களுடைய சொந்த நிலங்களிலோ அல்லது தனியார்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைத் தந்து உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு முன்வருவார்கள் என்று சொன்னால் அவர்களை அரசு ஊக்குவிக்கும், ஆதரிக்கும். எனவேதான் இதே மாமன்றத்திலே இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு தெரிவித்தேன். விதை சுத்திகரித்தல், அதனைப்போல இயற்கை உரங்களைத் தயாரித்தல் அல்லது தரிசாக உள்ள நிலங்களை மாணவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சாகுபடி செய்ய வேளாண் பட்டதாரிகள் முன்வந்தால் இந்த பட்டதாரிகளுக்கு எல்லா உதவிகளையும் அரசு செய்யும் என்று அறிவித்தேன். ஆனால் வேளாண் பட்டதாரிகள் அரசுத் துறையிலே வேளாண் அலுவலராக வரவேண்டும் என்று விரும்புகிறார்களேயொழிய நாட்டினுடைய ஒட்டுமொத்த உணவு உற்பத்தியைக் கருத்திலே கொண்டு அல்லது ஏழை எளிய விவசாயிகளுக்கு துணை புரிய வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலே வரவில்லை. வரவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலை அளிக்கின்றபோது தஞ்சை, நாகப்பட்டினம் போன்ற பகுதிகளிலே — விவசாய நிலங்கள், — விவசாயம் அதிகமாகச் செய்கிறவர்கள் இருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே பார்த்தால்

அங்கே விவசாயிகளாக இருக்கின்றவர்களுடைய சந்ததியினர்கள் எல்லாம் வேலையைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. விவசாயப் படிப்பை முடித்துவிட்டு 'சயின்டிபிக்காக' அங்கே விவசாயம் செய்வதற்கு ஏதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆடுதுறையிலே இருக்கின்ற `Seed Research Centre'-ஐ விவசாயக் கல்லூரியாக மாற்றி அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அவர்களுடைய சந்ததியினர் படிப்பதற்கு ஏதுவாக அந்தக் கல்லூரியைத் துவக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.20*

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரியிலே இருந்து வெளியே வரக்கூடியவர்கள் பட்டதாரிகள். ஆனால் உழவர்கள் தொழில்நுட்பம் பெற வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு பயிற்சிகள் இருக்கின்றன. இன்றைக்கு தஞ்சையிலே ஆடுதுறையிலே விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனைப்போல, ஏறத்தாழ 52 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அங்கே அவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் இன்றைக்கு கற்றுத்தரப்படுகின்றன. எனவே, விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே அவர்களுடைய தேவைக்கேற்ப தொழில்நுட்பம், எப்படி சிக்கனமான முறையிலே வேளாண்மை செய்வது, அதிக உற்பத்தியைப் பெருக்குவது, விளைந்த பொருட்களை எப்படிப் பதப்படுத்துவது, எப்படி சந்தைக்குக் கொண்டுபோவது ஆகிய தொழில்நுட்பங்களை எல்லாம் இன்றைக்கு தஞ்சையிலும் மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலும் இருக்கக்கூடிய நம்முடைய ஆராய்ச்சி மையங்கள் பயிற்சி அளித்து வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசியாக் கண்டத்திலேயே சிறந்த விவசாயப் பல்கலைக் கழகம் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் என்ற பெயர் பெற்றது. ஒரு காலத்திலே, அதிலே சேர்ந்து படித்தால் உடனடியாக வேலை கிடைக்கும் என்று பி.எஸ்ஸி.அக்ரி, எம்.எஸ்ஸி.(அக்ரி) போன்ற பட்டப் படிப்புகளுக்கு எல்லாம் மாணவர்கள் அதிகமாக சேர்ந்து படித்து வந்தார்கள். இப்பொழுது அதிலே படித்துவிட்டு 2 ஆயிரம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். ஆசியாக் கண்டத்திலே சிறந்த பல்கலைக் கழகம் என்ற பெயர் பெற்ற அந்தப் பல்கலைக் கழகத்தில் படித்துவிட்டு வெளியே வருகின்ற மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று வேலை பெறுவதற்கும்...

1996 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராஜு, மன்னார்குடியில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்கப்படுமா என்று தான் உறுப்பினர் மூலக் கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு 'இல்லை' என்று அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். அதற்குப் பின்னர் சரி, ஒரு விவசாயக் கல்லூரியாவது அங்கு அமைப்பீர்களா என்று கேட்டார். அதற்கும் சில விளக்கங்களை அமைச்சர் சொல்லியிருக்கிறார். நீங்கள் இப்பொழுது அந்த டிபார்ட்மென்டிலே இருக்கிற அத்தனை பிரச்சினைகள் பற்றியும் ஒரே கேள்வியிலே கேட்டால் அமைச்சரால் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்குத் தெரியும், ஆதலால் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை எப்படி நீங்கள் சொல்கிறீர்கள்?

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக் கழகம் என்னுடைய தொகுதியில் இருப்பதால், அமைச்சருக்கு அதுபற்றி தெரியும் என்பதால் நான் கேட்கிறேன். ஆகவே, அந்த மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை தேடுவதற்கு வசதியாக பட்டப்படிப்பு மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசியா கண்டத்திலே முதன்மையாக இருக்கக்கூடிய இடத்தை நம்முடைய பல்கலைக் கழகம் பெற்றிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னார். உலகிலே 4 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்று நம்முடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். இன்றைக்கு உலகளாவிய புகழும் பெற்றிருக்கிறது. இருந்தாலும், இன்றைக்கு மேலை நாடுகளில் இருக்கக்கூடிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே அல்லது உலகத்தினுடைய பிரசித்திப்பெற்ற வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திலே பணியாற்றக்கூடியவர்கள் நம்முடைய பல்கலைக் கழகத்திலே பயின்ற மாணவர்கள் என்பதனை இந்த மாமன்றத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பணியாற்றாத இடமே உலகிலே எந்த வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும் இல்லை. அந்த அளவுக்கு நல்ல ஆற்றலையும், அறிவையும் நம்முடைய வேளாண் பல்கலைக் கழகம் அந்த மாணவர்களுக்கு வழங்கி இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு உலகத்தாரால் மதிக்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்

என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொண்டு, மனித வள மேம்பாட்டு இலாகாவின் சார்பாக வேளாண்மை மனித வள புதிய திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு முதல் அது செயல்பட இருக்கிறது. எனவே, புதிய கல்வி மாற்றங்கள், காலத்திற்கேற்ற மாற்றங்கள் வரவேண்டும் என்பதை நாம் உணர்ந்து அதற்குரிய திட்டத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 87, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

87—

நெசவுத் தொழிலாளர்களுக்கு தொகுப்பு வீடுகள்

**10107—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரத்தில் நெசவுத் தொழிலாளர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசு ஏற்கெனவே அங்கே கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து இருக்கிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுமார் 8 லட்சம் நெசவாளர் குடும்பங்களை கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வந்து, 1 லட்சத்து 12 ஆயிரத்து 899 நெசவாளர் குடும்பங்களுக்கு நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாதம் 250 ரூபாய் குடும்ப ஓய்வூதியம் வழங்கியும், சிட்டா நூலுக்கான உதவித் தொகையை கிலோ ஒன்றுக்கு ரூ. 15-ல் இருந்து 20 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தும், கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைத்துள்ள நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS